படி தரப்படுகிறதா? அல்லது, கூடுதல் சம்பளம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. அதையெல்லாம் முறைப்படி அவர்கள் கேட்பார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். அதையெல்லாம் நிறைவேற்றுகிற நிலைமையில்தான் இந்த ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும். தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அண்ணா சாலையில் ஒரு கல்லூரியும் நந்தனத்தில் ஒரு கல்லூரியும் இருப்பதைவிட நந்தனத்திலே பெரிய இடமாக இருப்பதால் அங்கேயே இதையும் ஷிஃப்ட் செய்துவிட்டு, அண்ணா சாலையில் கலைக் கல்லூரி இருக்கும் இடத்தில் பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரியொன்றை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே சொன்னேன். அண்ணா சாலையிலுள்ள கல்லூரியிருக்கும் புகுமுக வகுப்பு, பட்டப் படிப்பு, முதல் இரண்டாவது வகுப்பு மாணவர்கள் நந்தனம் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பு மாணவர்கள் மட்டும் அங்கேயே பயின்றுவருகிறார்கள். அதற்குப் பிறகு அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சர்க்கார் சரியான முறையில், எந்தக் கேடும் ஏற்படாமல், எல்லாருடைய நலன்களையும் பாதுகாக்கும் வகையில் தக்க முடிவுகளை தக்க நேரத்தில் எடுக்கும்.

Archaeological Survey at Korkai

* 393 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the State Archaeological Department have undertaken any survey of the Korkai area in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

1973 நவம்பர் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1968-69 மேலும் 1971-72-ல் கொற்கையில் இரண்டு பருவங்களில் நில அகழ்வாய்வு செய்யப்பட்டது. முதல் பருவத்தில் 4 நீள்வரிப் பள்ளங்களும் இரண்டாவது பருவத்தில் 8-ம் தோண்டப்பட்டன. இரண்டு இடுகாடு சாம்பற் கொள்கலங்களும் வட்ட வடிவமான கிணற்றின் மேல் அடுக்கப்பட்ட செங்கல் கட்டிடம் பிராம்மி எழுத்துக்களால் அடையாளமிடப்பட்ட மட்கலத் துண்டுகள் வடக்கிந்திய, மெருகேற்றப்பட்ட கருப்பு நிற கலம் மற்றும் கரித்துண்டு மாதிரிகள் ஆகியவைகள் கண்டெடுக்கப்பட்டன.

அகழ்வாய்வின் தொடர்பாக வரலாற்றின் இடைநிலை காலத்திய வடிகால்களின் அமைப்பு, கிளிஞ்சல் சிப்பிமணிகள், வேலைப்பாடமைந்த சங்குகள், சுண்ணாம்பு சிப்பிகள், செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட மட்கலத் துண்டுகள் பல்வண்ணம் காட்டும் குறிப்பிடத்தக்க சுரண்டு வரி ஓவிய வேலைப்பாடுகள் அமைந்த மட்கலத்துண்டுகள் மற்றும் சுவஸ்திகா, பிராம்மிமா, திருசூலம், சூரியன் முதலிய சின்னம் பொறிக்கப்பட்ட மட்கலத் துண்டுகளும் அகழ்தெடுக்கப்பட்டன.

THIRU N. DENNIS : May I know Sir, whether the excavation has thrown light on the historical life of the ancient people?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரளவு அதற்கான அறிகுறிகள் இருக்கக்கூடும் என்ற முறையில்தான் இவை தோண்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பிராமிய எழுத்துக்கள் போன்றவைபற்றி இப்பொழுது ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் அகழ்வாராய்ச்சி செய்யும் சூழ்நிலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலிருந்து எடுக்கப்பட்ட கரித் துண்டுகளைப்பற்றிய ஆராய்ச்சியில் காலவரையறையைக் கணக்கிடும்போது, அந்தக் கரித் துண்டுகள் கி.மு. 758-ஆம் ஆண்டுக்கு முந்தியதாக இருக்கக்கூடும் என்று அறிவியல் ஆராய்ச்சியின்மூலம் தெரிகிறது. ஆகவே, கி.மு. 785-ஆம் ஆண்டுக்கு முன்பே நாகரிகம், மற்றவை இருந்திருக்கவேண்டும் என்று சிலபல முடிவுகள் கட்டத்தக்க அளவுக்கு இருக்கின்றன. மேலும் அகழ்வாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் பொருள்கள் மேலும் வரலாற்றுக் கருத்துக்களை நமக்குத் தருவனவாக அமையும்.

திரு. கே. டி கே. தங்கமணி: தலைவர் அவர்களே, கொற்கை குலசேகர அதிவீர ராம பாண்டியன் இந்த கொற்கையைத் தலைநகராக கொண்டு ஆட்சி நடத்தியதாகச் சொல்லப்படுகிறதே, அது குறித்த விவரம் ஏதாவது இந்த ஆராய்ச்சியிலிருந்து கிடைத்துள்ளதா? அந்தப் பாண்டியனின் வாழ்க்கையைப்பற்றியும் கல்வியைப் பற்றியும் ஏதாவது விவரம் கிடைத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கொற்கை, பாண்டிய நாட்டினுடைய தலைநகராக விளங்கியிருக்கிறது. பாண்டிய நாட்டினுடைய துறைமுகமாகவும் இருந்திருக்கிறது என்பதற்கு வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகள் குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. செலிப்ளூஸ் என்ற வெளிநாட்டுப் பயணி எழுதிய குறிப்புகளிலிருந்து அங்கே முத்து எடுக்கப்பட்டது, முத்து வாணிபம் நடைபெற்றது என்பதற்குக் குறிப்புகள் இருக்கின்றன. வெற்றிவேல் செழியன் பாண்டியன் அதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்றும் தெரிகிறது. ஆனால், இப்படிப்பட்ட இலக்கிய அகச்சான்று, பயணிகள் தரும் அகச்சான்று மூலமாகத் தெரிந்துகொள்வது மட்டுமல்லாமல், அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைக்கும் பொருள்கள் தொன்மையின் தன்மையைக் காட்டுவனவாக அமையும். அதிலே கண்டெடுக்கப்பட்ட செங்கல்கள் நல்ல அமைப்பாக இருப்பதோடு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும் கணக்கிடுகிற அளவுக்கும் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, தென் இந்திய சரித்திரத்தைப்பற்றி நீலகண்ட சாஸ்திரி அவர்கள் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிற்பாடு தென் இந்திய சரித்திர வரலாற்றைப் புதுப்பித்து எழுதுவதற்கு ஏதாவது ஏற்பாடு ஆகியிருக்கிறதா? அப்படி எழுதுகிற நேரத்தில் கொற்கை போன்ற பகுதிகளில் கிடைத்திருக்கிற தொல் பொருள் ஆராய்ச்சி பற்றியும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் எழுதப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழகத்தினுடைய வரலாறு பற்றிப் பல்வேறு வரலாற்று ஆசிரியர்கள் துண்டு துண்டாக எழுதியிருக்கிறார்கள். சில வரலாற்று ஆசிரியர்கள் அதைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் உட்படுத்திய வகையில் தொகுத்து ஒரு பெரிய வரலாற்றுப்

1973 நவம்பர் 27]

புத்தகத்தை எழுதுவதற்காக திரு. மு. வரதராசனார் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சித் துறையில் அமைக்கப்பட்ட குழு இரண்டு ஆண்டு காலமாக அந்தப் பணியை ஆற்றிக்கொண்டு வருகிறது. அதற்கு அந்தக் குழுவில் பணியாற்றுவதற்குத் தேவையான பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : சோழ நாட்டின் தொன்மையை விளக்கிக் காட்டுவதற்கு தமிழக அரசு பூம்புகார் பெருமையை தொல் பொருள் ஆராய்ச்சித்துறை மூலம் விளக்கிக் காட்டிக்கொண்டிருக்கிறது. அதைப்போல பாண்டிய நாட்டின் தொன்மையை, பழங் கால பெருமையைப்பற்றி ஆராய்ச்சி செய்து விளக்கம் செய்வதற்கு தமிழக அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய ஆராய்ச்சி முடிந்து சிறப்புக் குறிப்புகள் கிடைத்த பிறகு அது குறித்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

திரு. செ. கந்தப்பன் : மைய அரசு சார்பில் செண்டிரல் போர்டு ஆஃப் ஆர்கியாலஜி நிர்வாகம் கல்வித் துறையின் மூலம் இயங்கிக் கொண்டு வருகிறது. நம்முடைய தமிழகத்தில் நடைபெறுகிற அகழ்வு ஆராய்ச்சிக்கு அவர்கள் எந்த அளவுக்கு உதவுகிறார்கள் என்று அரசு தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில பல திட்டங்களை மத்திய அரசு அகழ்வு ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள். கொற்கை, பூம்புகார் அகழ்வு ஆராய்ச்சியிலும் மத்திய அரசு ஒரு பங்கை மேற்கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கி, அதற்கு வேண்டிய ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. வேறு சில இடங்களிலும் ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. கொற்கை போன்ற அகழ்வு ஆராய்ச்சிப் பணியை தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறையும் மேற்கொண்டிருக்கிறது. இதைத் தவிர சென்னை பல்கலைக்கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சி மாணவர்கள் காஞ்சிபுரத்திலும். மற்றும் பல இடங்களிலும் அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தொல்பொருள் ஆராய்ச்சி செய்கிறவர்கள் ஆராய்ச்சி செய்கின்ற நோக்கில் 'பல வீடுகள், கிராமங்களை தோண்டி எடுக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய பண்பாடு,

நாகரிகம், கலாச்சாரம் 1,000, 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தது என்று தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதற்கான நஷ்ட ஈடுகளையெல்லாம் சரிக்கட்ட மத்திய அரசினடமிருந்து நிறைய நிதி கோரி, இப்படிப்பட்ட ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல் பொருள் ஆராய்ச்சிக்கு இன்றைக்கு ஒதுக்கப்படுகிற பணம் மிகக் குறைவு. கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் இதுபற்றி வற்புறுத்தப்படுகிறது. ஆகவே, இந்தத் துறைக்கு கொஞ்சம் அதிகமாக பணத்தை ஒதுக்கி, இப்படிப்பட்ட பழங்காலச் சின்னங்களை கண்டுபிடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கொற்கையில் ஆட்சி புரிந்த குலசேகரபாண்டியன் தம்பி அதிவீரராம பாண்டியன் அதிராமபட்டணத்திற்கு வந்து இங்கே வாழ்ந்து நைடதம் என்ற நூலையும் எழுதியிருக்கிறார். அதிராமபட்டணத்தைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : அதிராமப் பட்டணத்தை துறைமுகமாகக் கொண்டது மிகப் பிற்பட்ட சிலபல நூற்றாண்டுகள் காலமாகும். கொற்கை 2,000, 3,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே சிறப்புற்று விளங்கிய பழம் பெரும் துறைமுகமாகும். 'முத்துறை வந்துலா கொற்கை' என்று சங்ககால இலக்கியங்களில் போற்றப்பட்டிருக்கிறது. மூன்றுறை விழுதி கொற்கை என்றும் கூறப்பட்டிருக்கிறது. 2,000, 3,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இருந்துவந்திருக்கிறது கொற்கை. அதிராமப்பட்டணம் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகத்தான் உருவாக்கப்பட்டது. அங்கே ஆராய்ச்சிக்கு பயன்படக்கூடிய அளவுக்கு பொருள்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : ஆர்கியலாஜிகல் டிபார்ட்மெண்டில் ஒரு 'ஸெல்' ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சின்னங்களையும், மற்றும் இம்மாதிரி பழைய காலத்துப் பொருள்களை ஆராய்ச்சி செய்வதற்கு எந்த அளவுக்கு பரிசீலனை செய்திருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு, அதற்கென்று ஒரு இயக்குநர் நியமிக்கப்

1973 நவம்பர் 27]

பட்டு, அவருக்கு வேண்டிய துணையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பண்டை கால எழுத்துக்களை கண்டறிந்து புரிந்து கொள்வதற்கு பலருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டு பயிற்சி தருவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எம்.ஏ. படித்தவர்கள், ஹிஸ்டரி, ஆர்கியலாஜி, பழைய வரலாறு ஆகியவை படித்தவர்களுக்கு முக்கியத்துவம் தந்து, அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஓரளவுக்கு தமிழகத்திலும் அகழ்வு ஆராய்ச்சித் துறையில் கொஞ்சம் கூடுதலாக பணத்தை ஒதுக்கி, அதற்காக தனியாக ஒரு அச்சகத்தை வைத்து, அவ்வப்பொழுது கண்டு பிடித்ததை வெளியிட்டுக்கொண்டு வருகிறார்கள்.

திரு. எஸ். வடிவேல்: தொல் பொருள் ஆராய்ச்சி ஆய்வுக்காக செலவுத் தொகையை ஏற்பது மத்திய அரசா, மாநில அரசா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநில அரசு சார்பாக இருக்கிற தொல் பொருள் ஆராய்ச்சிக்கு மாநில அரசு தான் செலவிடுகிறது. மத்திய அரசின் சார்பாக தொல் பொருள் ஆராய்ச்சிக்கு தமிழகத்திலே சிலபல பகுதிகளிலே அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணியையும் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். பழம்பொருள் பாதுகாப்புப் பணிகள் என்ற வகையில் மத்திய அரசின் கீழும் சில பல கோவில்கள், பழைய இடங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் தமிழகத்தின் சார்பாக தொல் பொருள் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

தரங்கம்பாடியிலுள்ள கோட்டை

* 394 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுகா தரங்கம்பாடி கோட்டையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.